**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (இரணைமடு கூறு) - 2014**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் - இரணைமடு கூறு 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர்களாவுள்ளதுடன் மாகாண நீர்பாசன திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. யாழ்ப்பாணம் தீபகற்பக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு மாதாந்தம் விரிவாக்கப்பட்ட தேக்கத்திலிருந்து 660 ஏக்கர் அடி விடுவிப்பதற்கும் தண்ணீர் தேக்கி வைக்கும் இயலளவை அதிகரிப்பதற்கும் இரணைமடுக்குளத்தை வலுப்படுத்தி பெருப்பிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16.32 மில்லியனானதுடன் அதில் ரூபா 620 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.03 மில்லியன் அல்லது 79 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 180 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.29 மில்லியன் அல்லது 21 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் (ஜீஓஎஸ்எல்) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 மே 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 பெப்ரவரி 17 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

உடன்படிக்கையின் பிரகாரம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் - இரணைமடு கூறு தொடர்பான நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

பகுதி 1: தண்ணீர் மற்றும் காணி உற்பத்தியின் நிலைபேறான முன்னேற்றத்தை அடைவதற்கு நுழைவாயில், சுழல் வாயிற்கதவுகள், மேற்கவசம், சக்தி விரயமாக்கல் கட்டமைப்புக்கள், பாலம், மதகு கதவுகள் மற்றும் தானியங்கிகள் என்பன உள்ளடங்கலான இரணைமடு தலைமை வேலைகளின் புனரமைப்பு

பகுதி 2: நீரப்பாசன வாய்க்கால் முறைமையினை முன்னேற்றுவதற்கான திருத்தங்கள்

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 கணக்காய்வாளரினுடைய பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீதுதெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறானசெவ்வையினையும் அப் பரிசோதனைஉள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவீனங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்,கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள்,பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு எனது அபிப்பிராயமானது முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்ததகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்தகாலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்டநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள்மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2003 செப்தெம்பர் 30 இன் 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் நிறுவனத்தால் மாதாந்தம் அல்லது தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு ஒப்பந்தக்காரராலும் தனிப்பட்ட ரீதியில் பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆலோசனையாளர்களுக்கான பெறுமதி சேர் வரி கொடுப்பனவான ரூபா 1,176,042 கூட்டுத் தொகை தொடர்பான தகவல்கள் நிர்ணயித்த காலத்திற்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி

வைத்திருக்கவில்லை என_அதன் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் வெளிக்காட்டப்பட்டிருந்தது.

## 3. பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளபட்ட ஒதுக்கீடு | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ஐ.அ.டொ மில். | ரூபா. மில் | ஐ.அ.டொ மில். | ரூபா. மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 13.03 | 620 | 620 | 0.07 | 9.12 | 0.32 | 42.71 |
| இலங்கை அரசாங்கம் | 3.29 | 180 | 180 | - | - | - | - |
| | 16.32 | 800 | 800 | 0.07 | 9.12 | 0.32 | 42.71 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

நீர் மற்றும் காணி உற்பத்தியின் நிலைபேறான முன்னேற்றத்தை அடைவதற்கு நுழைவாயில், சுழல் வாயிற்கதவுகள், மேற்கவசம், சக்தி விரயமாக்கல் கட்டமைப்புக்கள், பாலம், மதகுவேலிகள், தானாக இயங்கும் இயந்திரம் என்பன உள்ளடங்கலான இரணைமடு தலைமை வேலைகளின் புனரமைப்பிற்கான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் காலத்தில் 3½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிடுகையில், தண்ணீர் பாய்ச்சுகின்ற பகுதிகளிலுள்ள விவசாயிகளிடமிருந்தான உறுதியான தடைகள் காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார். கணக்காய்வின் பார்வையில், செயற்திட்டத்தினுடைய ஆரம்ப கட்டத்திலேயே செயற்திட்டத்தினுடைய செயற்பாடுகள் தொடர்பில் விவசாயிகளுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் செயற்திட்டத்தினுடைய கிரயம் மற்றும் காலத்தை சேமிப்பதன் மூலம் தடைகளை குறைத்திருக்கலாம்.

### 3.3 விதிவிலக்கான செலவினங்கள்

நீர்ப்பாசன திணைக்களத்துடன் தொடர்புடைய ரூபா 135,977 கூட்டு மொத்தத் தொகையான தொலைபேசி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் பாடநெறிச் செலவினங்கள் செயற்திட்டச் செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.